# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## நிர்வாகக் குழுத் தெரிவு 2017-2018

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கயாப்பின்4(உ)ஆம் பிரிவிற்கமைய 2017-2018 நிர்வாகக் குழுவிற்கான தெரிவு இந்தவருடம் நடைபெறவுள்ளது. கீழே விபரிக்கப்படும் பதவிகளுக்கான நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**

| | | |
|---|---|---|
| i. | தலைவர் | 01 |
| ii. | துணைத்தலைவர்கள் | 05 (அதிபர் பதவி வழி துணைத் தலைவர்) |
| iii. | செயலாளர் | 01 |
| iv. | துணைச் செயலாளர் | 01 |
| v. | பொருளாளர் | 01 |
| vi. | துணைப் பொருளாளர் | 01 |
| vii. | பத்திராதிபர் | 01 |
| viii. | செயற்குழு உறுப்பினர் | 18 |

(யாப்பு விதிமுறைக்கமைய கடந்த (2016-2017) செயற்குழுவின் தலைவர் செயலாளர் பொருளாளர் ஆகியோர் செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படின் மேலதிகமாக 15 தெரிவுசெய்யப்படுவர்)

**தேர்தல் விதிமுறைகள்**

1. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யலாம். போட்டியிடும் ஒருவர் i-vii வரையான பதவிகளில் ஒன்றிற்கும், செயற் குழு உறுப்பினருக்கும் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். i-vii வரையான பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒருவர் விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறு விண்ணப்பின் அவருடைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். ஒருவர் i-vii வரையான பதவிகளில் ஒன்றுக்கும் செயற் குழு உறுப்பினருக்கும் விண்ணப்பிக்க விரும்பின் தனித்தனி நியமனப்பத்திரங்களை பூர்த்தி செய்து தனித்தனி கடித உறையிலிட்டு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 09-02-2017 பி.ப. 2.00 மணி.

2. செயற்குழு உறுப்பினர்களுக்கான தெரிவும் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் வேட்புமனு கோரப்பட்டு பொதுக்குழுக் கூட்டத்தில் தேர்தல் மூலம் நடைபெறும். செயற்குழு உறுப்பினர் தேர்வுக்கு முன்னைய செயற்குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர், ஆகியோரிடமிருந்து வேட்புமனு கிடைக்குமிடத்து அவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்படுவர். எஞ்சிய இடங்களுக்கு தேர்தல் இடம்பெறும் (யாப்பு விதி 6(ஏ)).

3. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக போட்டியிட எவரும் இல்லாதவிடத்து (பதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது நிராகரிக்கப்படுமிடத்து) அந்த பதவிக்கான தேர்வு பொதுக் கூட்டத்தில் சபையினால் தெரிவுசெய்யப்படும்.

4. குறித்த பதவிக்காக ஒருவர் மட்டுமே போட்டியிடும் வாய்ப்பு ஏற்படின் அவர் ஏகமனதாக தெரிவுசெய்யப்படுவார்.(அப்பதவிக்கு வாக்கெடுப்பு நடைபெறாது)

5. முற்றாக பூர்த்திசெய்யப்படாத, சரியாக முகவரியிடப்படாத, மற்றும் குறித்ததினத்திற்கு பின்னதாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. சுயமாகவோ அல்லது வேறு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களினது முன்மொழிவின் மூலமாகவோ நியமனப் பத்திரம் தாக்கல் செய்யலாம். வேறு பழையமாணவர் சங்க உறுப்பினர்களினது முன்மொழிவின் மூலமாக நியமனப் பத்திரம் தாக்கல் செய்வோர் பதவிக்கு விண்ணப்பிப்பவரின் ஒப்புதலைப் பெறுதல் அவசியம்.

7. விண்ணப்பங்கள் தேர்தல் குழுவால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு தொடர்பாடல் முறை மூலம் உறுதிசெய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக தேர்தல் குழுவால் 13-02-2017 ஆம் திகதி விண்ணப்பித்தவர்களிற்கு அறிவிக்கப்படும்.

8. நியமனப் பத்திரங்களை விலக்கிக் கொள்வதற்கான இறுதித் திகதி 16-02-2017 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் ஆகும். நியமனப்பத்திரங்களை விலக்கிக் கொள்ளலானது எழுத்துமூலமாக பதவிக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டவரினால் விலக்கிக்கொள்ளப்படல் வேண்டும்.

9. தேர்தல் குழுவால் இறுதிசெய்யப்பட்ட வேட்பாளர் விபரங்கள் 21-02-2017 பழையமாணவர் சங்க இணையத்தளம் (www.jhcobajaffna.com) மூலமும் பழையமாணவர் சங்க விளம்பரப்பலகை மூலமும் காட்சிப்படுத்தப்படும்.

10. வாக்கெடுப்பு வருடாந்த பொதுக்கூட்ட தினத்தன்று இடம்பெறும்.
(பொதுக் கூட்ட அறிவித்தல் வழமை போல் பழைய மாணவர் சங்க செயலாளரினால் அறிவிக்கப்படும்.)

11. நியமனப் பத்திரம் பூர்த்திசெய்யும்போது பின்வரும் நிபந்தனைகளைக் கருத்தில்கொள்க
    - நடப்பு செயற் குழு (2016-2017 ) பதவிக் காலத்தில் செயற்குழு உறுப்பினராக உள்ள ஒருவர் நடைபெற்ற மொத்த செயற்குழுக் கூட்டத்தில் 50%ஆன கூட்டங்களுக்கு சமூகமளித்திருத்தல் அவசியம். (யாப்பு விதி 6(ஊ)).
    - தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிவகித்த ஒரு உறுப்பினர் தொடர்ந்து அந்தப் பதவிகளுக்கு அடுத்தடுத்து 2 தடவைக்கு மேலாக தெரிவு செய்யப்பட முடியாது (மாறாக விண்ணப்பிக்கவும் முடியாது) (யாப்பு விதி 4(ஈ)).
    - தலைவர்,செயலாளர்,பொருளாளர் ஆகிய பதவி நிலைகளுக்கு விண்ணப்பிப்பவர் செயற்குழுவில் கடைசி 5 வருடங்களில் குறைந்தது 1 வருடம் பணியாற்றியவராக இருக்க வேண்டும் (யாப்பு விதி 4(ஊ)).
    - i-vii வரையானபதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்டபதவிகளுக்கு ஒருவர் விண்ணப்பின் அவரது சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

12. தேர்தல் குழுவின் முடிவே இறுதியானது.

முற்றாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையிலிட்டு ஒட்டி

தலைவர்
தேர்தல் குழு,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

என முகவரியிட்டு இடது பக்கமேல் மூலையில் நிர்வாகக் குழுத் தெரிவு 2017-2018 – விண்ணபத்திற்கான பதவியையும் குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்களை 09.02.2017 மாலை 2 மணிக்கு முன்னர் பதிவுதபால் மூலமாகவோ அல்லது சங்க விற்பனை நிலையத்தில் வாரநாட்களில் 2 மணிவரை நேரடியாகவோ கையளிக்கலாம்.

.......................................  .......................................

தலைவர்
தேர்தல் குழு

செயலாளர்
தேர்தல் குழு

திகதி: 28-01-2017

தொடர்புகளுக்கு:
தேர்தல் குழு உறுப்பினர்கள்
வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் - தலைவர்
திரு.முரளிதரன் - செயலாளர் (0776539952)
வைத்திய கலாநிதி நந்தகுமாரன்
திரு. சூரியகுமாரன்
சட்டத்தரணி கு.குருபரன்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – பழைய மாணவர் சங்கம்

## நிர்வாகக் குழுத் தெரிவு 2017-2018

### நியமனப் பத்திரம்

திகதி:

தலைவர்,
தேர்தல் குழு,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க 2017-2018 நிர்வாக குழு தேர்தல் நியமனம்

| **விபரங்கள்** | | | |
|---|---|---|---|
| விண்ணப்பிக்கும் பதவி: | | | |
| | **பதவிக்குரியவர்** | **முன்மொழிபவர்** | **வழிமொழிபவர்** |
| முழுப்பெயர் | | | |
| ப.மா.ச. அங். இல. | | | |
| தே.அ.அ. இல. | | | |
| முகவரி | | | |
| அலை பேசி எண் | | | |
| மின்னஞ்சல் முகவரி | | | |
| கையொப்பம் | | | |
| குறிப்பு: சுயமாக விண்ணப்பிப்பவர்களிற்கு முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் அவசியமில்லை<br>ப.மா.ச. அங். இல. : பழையமாணவர் சங்கஅங்கத்துவ இலக்கம் | | | |

---

**சுயமாகநியமனப் பத்திரம் தாக்கல் செய்யாமல் வேறொருவரால் முன்மொழிவு செய்யப்பட்டவரினால் பூர்த்தி செய்ய வேண்டியது:**

2017-2018 நிர்வாக குழுவில் மேற்குறிப்பிட்ட பதவிக்கு முன்மொழியப்பட்டதை முழு சம்மதத்துடன் ஏற்றுக் கொள்கிறேன்.

……………………………………….

கையொப்பம்

முழுப்பெயர்: